
கவியரசன்
காளிதாசன்
S. Rajan

Koviloor Acadamy

கவியரசன் காளிதாசன்

அ. வெ. சுப்ரமணியன் B. Sc., B. T., Dip (S. W.)

★

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்
தேனம்பேட்டை :: சென்னை 18.

அமுதம்—112
முதற் பதிப்பு ஏப்ரல், 1956
உரிமை பதிவு

விலை ரூ. 0—12—0

நேஷனல் ஆர்ட் பிரஸ், தேனம்பேட்டை, சென்னை - 18.

கவியரசன் காளிதாசன்

1

சம்ஸ்கிருதக் கவிகளுக்குள் காளிதாசன் சிறந்தவன். அவன் சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் பிறந்தான். விக்கிரமாதித்தியன் என்னும் அரசனின் ஆதரவில் வாழ்ந்தான். அழகான கவிதைகளைப் பாடினுன். அவைகளுள் **'ரகுவம்சம்'** என்பது ஒன்று.

ரகுவம்ச காவியத்தில் ராமனின் முன்னோர்களைப் பற்றியும், அவனுக்குப்

பின் வந்த மன்னர்களைப் பற்றியும் படிக்கிறோம். ராமனின் பாட்டன் அஜன் என்பவன் ஒரு முறை விதர்ப்ப நாட்டுக்குப் போனான். அந்த நாட்டின் இளவரசி இந்துமதிக்குச் சுயம்வரம் ஏற்பாடு செய்திருந்தார்கள். பெண் ஆண்மகனைத் தேர்ந்தெடுத்து மாலை இடுவதே சுயம்வரம். அதற்குப் பல நாட்டு மன்னர்களுடன் அஜனும் போயிருந்தான்.

மாலையைக் கையில் எடுத்துக் கொண்டு தோழியுடன் சுயம்வர மண்டபத்திற்குள் இந்துமதி நுழைந்தாள். தோழி நல்ல அறிவுள்ளவள். சுநந்தை என்பது அவள் பெயர். மண்டபத்தில் உட்கார்ந்திருந்த ஒவ்வோர் அரசனைப் பற்றியும் இந்துமதிக்கு விவரமாகச் சொல்லிக் கொண்டே வந்தாள். தனக்குப் பிடித்த அரசகுமாரனுக்கு இந்துமதி மாலையை இட வேண்டும்.

அங்க தேசத்து அரசகுமாரனை அறிமுகம் செய்யும் போது சுநந்தை சொன்னாள்:

''தேவி, இந்த மன்னன் பூமியில் மட்டுமின்றி தேவர்கள் உலகத்திலும் புகழ் பெற்றவன். பலம் மிக்கவன். படிப்பும், பணமும் ஒரே மனிதனிடம் சேர்ந்து இருப்பதைக் காண முடியாது. ஆனால் இந்த அரசனிடம் படிப்பும், செல்வமும் அளவில்லாமல் இருக்கின்றன. இவனுக்கு நீ மாலை இடுகிறாயா?''

இந்துமதி அங்க இளவரசனுக்கு மாலையிடவில்லை. அங்கிருந்து மேலே நடந்தாள். சுநந்தையும் பின் தொடர்ந்தாள். மற்றவர்களுக்கு அந்த இளவரசன் உயர்ந்தவனாக இருக்கலாம். இந்துமதியின் கண்ணுக்கு அவன் சிறந்தவனாகத் தோன்றவில்லை.

விருப்பும் வெறுப்பும் ஒருவருக்கு ஒரு பொருளில் கா ர ண மில்லாமலேயே ஏற்பட்டு விடுகின்றன அல்லவா?

பிறகு சுநந்தை பல அரச குமாரர்களைப் பற்றி இந்துமதியிடம் புகழ்ந்து கூறினுள். இந்துமதியின் மனம் அவர்களை விரும்பவில்லை. அவந்தி நாட்டு அரசனையும், பாண்டிய மன்னனையும் தாண்டிக் கொ ண் டு போனுர்கள். ரா வ ணனை யு ம் வென்ற கார்த்த வீரியனின் வமிசத்தில் வந்த பிரதீபனையும் பார்த்து விட்டு மேலே போனுர்கள். ஒவ்வோர் இளவரசனையும் இவர்கள் நெருங்கும் போது அவன் முகம் பிரகாசமடைந்தது. 'நமக்குத்தான் இந்துமதி மாலையிடுவாள்' என்று ஒவ்வொருவரும் நம்பினுர்கள். சுநந்தையும் இந்துமதியும் அவர்களைத் தாண்டிப் போகும் போ்து அவர்கள் முகம் வாட்டத்தை அடைந்தது. துக்கமும், வெட்க

மும் மேலிட, தலையைக் குனிந்து கொண்டார்கள்.

பல இளவரசர்களைத் தாண்டிக் கொண்டு, சுநந்தையும் இந்துமதியும் அஜனிடம் வந்தார்கள். அஜனைப் பார்த்ததும் சுநந்தை அவனை உற்சாக மாக வர்ணிக்கலானாள். "இளவரசி! சூரிய வமிசத்தில் தோன்றியவன் இவ் இளவரசன். இளவயதிலேயே இந்திர னுடன் போர் புரிந்த ரகு மன்னனின் குமாரன். குலத்திலும், செல்வத்திலும், குணத்திலும், அழகிலும் இவன் சிறந்த வன். நீ இவனை மணந்து கொள்வது, உயர்ந்த வைரக்கல்லைத் தங்க நகையில் பதித்தது போல் மிகப் பொருத்தமாக இருக்கும்" என்றாள் சுநந்தை.

இந்துமதி ஒரு கணம் தயங்கி நின்றாள். அஜனையே அவள் மனம் விரும்பியது. ஆனால், அவனைக் கண்டதும் வெட்கம்

சூழ்ந்து கொண்டதால் அவள் சிறிது தாமதித்தாள்.

''போகலாமா?'' என்று தோழி குறும்பாகக் கேட்கவே, இந்துமதி சமாளித்துக்கொண்டு அஜனின் கழுத்தில் மாலையைப் போட்டாள்.

அஜனுக்கும் இந்துமதிக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்திற்குப் பின் அஜன் மனைவியை அழைத்துக் கொண்டு புறப்பட்டான். மற்ற மன்னர்கள் இந்துமதியை விரும்பி ஏமாந்து போனுர்கள் அல்லவா? வழியில் அஜனை இம்மன்னர்கள் மறித்துக் கொண்டு போரிட்டார்கள். நெடுநேரம் போர் கடுமையாக நடைபெற்றது. முடிவில் அஜனுக்கே வெற்றி கிடைத்தது. வெற்றியின் அறிகுறியாக ஜயலக்ஷ்மி போல் இருந்த இந்துமதியை

அழைத்துக் கொண்டு தன் ஊருக்குத் திரும்பினான்.


தந்தை ரகு தனக்கு வயதானதை உணர்ந்து, அஜனுக்கு முடி சூட்டி விட்டுத் துறவறத்தை மேற்கொண்டான். அஜன் ஆட்சியிலே நாடு செழிப் படைந்தது. பஞ்சமும், நோயும், பகையும் மறைந்தன. தன்னுயிர் போல் அரசன் குடிகளைப் பாதுகாத்து வந்தான். சில ஆண்டுகளில் இந்துமதி ஒப்பற்ற ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். அவனுக்குத் தசரதன் என்று பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தார்கள்.

ஒரு நாள் அஜனும் இந்துமதியும் அரண்மனைத் தோட்டத்தில் இன்பமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அச்சமயம் நாரதர் ஆகாய வழியே வீணையுடன் போய்க் கொண்டிருந்தார். அவர் வீணையில் தேவலோக மலர் மாலை

சூட்டப் பட்டிருந்தது. அம்மாலை அவிழ்ந்து காற்றில் மிதந்து வந்து இந்துமதியின் மேல் விழுந்தது.

மாலை உடம்பின் மேல் பட்டதும் இந்துமதி கீழே விழுந்தாள். அக்கணமே அவளது உயிர் பிரிந்தது. அரசன் இடி விழுந்தவன் போல் நின்றான். அவன் துயரம் அளவு கடந்து போயிற்று. மனைவியின் உடலை மடிமேல் போட்டுக் கொண்டு, தாங்கமுடியாத துயரத்தால் நெஞ்சம் வெடித்து விடுவது போல் கதறினான்.

அரசனின் கடமைகளை மறந்து அஜன் மனைவியையே நினைந்து வருந்திய வண்ணம் இருந்து வந்தான். அரச குரு வசிஷ்டர் அவனைச் சமாதானம் செய்ய எண்ணினார். அரசனிடம் தமது சீடனை அனுப்பினார்.


S. Rajam

வசிஷ்டாின் சீடன் அரசனிடம் வந்து, 'மண்ணில் உடல் நிலையாதது' என்று உபதேசித்தான். 'இறந்தவரைக் குறித்து வருந்துவது மூடனின் செய்கை' எனக் காட்டினான். இந்துமதியின் முன் வரலாற்றையும் அரசனுக்கு எடுத்துரைத்தான்.

இந்துமதி முன்பு ஹரிணி என்ற அப்ஸரப் பெண்ணாக இருந்தாள். கடுந் தவம் செய்யும் ஒரு முனிவரின் தவத்தைக் கலைக்க இந்திரன் ஹரிணியை ஏவினான். ஹரிணியின் பாட்டும் நடனமும் முனிவரின் தவத்திற்கு இடையூறாக இருந்தன. கோபம் கொண்ட முனிவர், "மண்ணுலகில் நீ ஒரு பெண்ணாகப் பிறப்பாய்" என்று அவளைச் சபித்து விட்டார்.

தனக்கு நேர்ந்துவிட்ட அபாயத்தை ஹரிணி உணர்ந்தாள். தன் தவற்றை

மன்னிக்கும்படி முனிவரிடம் வேண்டினுள். மன மிரங்கிய முனி வரும், "நீ நெடுநாள் உலகில் வாழ வேண்டாம். தேவலோகத்தின் மல ரோடு சேர்க்கை ஏற்படும் போது நீ மேலுலகம் வந்து அடைவாய்" என்று கூறினர்.

"ஆகவே இந்துமதிக்கு விடுதலை கிடைத்து விட்டது. அவள் மேலுலகில் மகிழ்ச்சியாக இருக்கிருள்" என்று சீடன் அஜனிடம் விளக்கிச் சொன்னன். இதனுல் அரசன் ஓரளவு மனங் தெளிவடைந்து தன் கடமை களைக் கவனிக்கலானன்.

குழந்தை தசரதனுக்கு வயது வந்ததும் அஜன் அவனிடம் அரசை ஒப்புவித்தான். பிறகு உயிர் நீத்து மேலுலகில் மனைவியுடன் பிரிவில்லாத இன்ப வாழ்க்கையை நடத்தலானன்.

இந்துமதியின் சுயம்வர வர்ணனை யும், அஜன் அரசாண்ட முறையும், இந்துமதி இறந்த பின் அஜன் மன முடைந்து கதறியதும் அழகு நிறைந்த சுலோகங்களில் அமைந்துள்ளன. ரகு வம்ச காவியத்தில் மற்ற அரசர்களின் வரலாற்றைவிட, அஜனின் வாழ்க் கையை வர்ணிக்கும் பாகமே சிறந்தது எனக் கொள்வர்.

2

உலகத்தின் தாய் தந்தையராகச் சிவனும் பார்வதியும் வணங்கப்படுகிறார் கள். சிவன் பார்வதியை மணந்த வர லாற்றைக் காளிதாசன் **குமாரசம்பவம்** என்ற காவியத்தில் கூறுகிறான். இமா லயம் என்ற மலையரசனுக்கும் மேனு என்ற அவன் மனைவிக்கும் பிறந்த குழந் தையே பார்வதி. பிறந்த நாளிலிருந்து சிவனையே மணக்க வேண்டும் என்ற

எண்ணத்தோடு இருந்தாள். ஒரு முறை இமாலயத்திற்கு வந்த நாரதமுனியும் பார்வதி சிவனேயே மணப்பாள் என்று கூறிஞர். இவ்வெண்ணத்திலேயே வளர்ந்த பார்வதி திருமணப் பருவத்தை அடைந்தாள்.

தன் பேய்க்கணங்களோடு ஒரு முறை, பரமசிவன் தவம் செய்யும் எண்ணத்துடன் இமாலயத்திற்கு வந்தார். விருந்தினரை மலையரசன் அன்போடு வரவேற்ருன். தவம் செய்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தான்.

அவற்ருேடு அவருக்குக் குற்றேவல் புரியப் பார்வதியையும் அனுப்பிஞன்.

இதற்கிடையில் தாரகன் என்ற அசுரன் தவஞ்செய்து வரம் பெற்று அந்த பலத்திஞல் மூவுலகங்களையும் கொடுமைப்படுத்த ஆரம்பித்தான்.

"சூரியன் என் தலைநகரில் தாமரைகள் மலரத்தக்க உஷ்ணத்துடனே பிரகாசிக்க வேண்டும். நந்தவனத்திலுள்ள மலர்கள் அங்கிருந்து அகலாவண்ணம் காற்றும் தணிந்து வீசவேண்டும். சந்திரன் தேய்வில்லாமல் என்றும் முழு நிலவாகப் பிரகாசிக்க வேண்டும்" என்று இவ்வாறு தேவர்களையும் அடக்கி ஆட்சி செலுத்தினான் தாரகன்.

கொடுமை தாங்காத தேவர்கள் பிரமனிடம் சென்று முறையிட்டார்கள். பிரமன் மனமிரங்கி, "தேவர்களே! உங்கள் சேனை, பலத்தில் குறைந்ததல்ல, ஆயினும் தாரகனை உங்களால் வெல்ல முடியாமலிருக்கக் காரணம் சேனைக்கேற்ற தளபதி இல்லை. தேவ சேனைக்குச் சேனாதிபதி ஆகப் பரமசிவனுக்கு ஒரு மகன் தோன்ற வேண்டும். பரமசிவனுக் கேற்ற மனைவி மலையரசன் மகள் பார்வதியே. சிவனுக்கும் பார்

வதிக்கும் நீங்கள் திருமணத்தை நடத்தி விட்டால் தாரகனின் கொடுமை நீங்கும்'' என்று கூறி மறைந்தார்.

மலையில் தவஞ்செய்து வந்த சிவனுக்குப் பார்வதி பணிவிடை செய்து வந்தாள். இவ்விருவருக்கு மிடையே அன்பை ஏற்படுத்த வேண்டுமென்று தேவர்கள் எண்ணினார்கள். மன்மதனை வசந்தனுடன் இமாலயத்துக்கு அனுப்பினார்கள்.

வசந்தனின் வருகையால் மரங்கள் தளிர்விட்டுப் பூத்தன. பேய்க்கணங்களும் மனம் குலைந்து சிற்றின்பத்தை நாடின.

அச்சமயம் பார்வதி சிவன் இருந்த ஆசிரமத்துக்குள் நுழைந்தாள். சிவனும் தவம் கலைந்து நிமிர்ந்தார். சமயம் பார்த்திருந்த மன்மதனும் சிவன் மேல் மலர் அம்பை விடுத்தான்.

சிவனின் மன உறுதியும் தளர்ந்தது. தன் மூன்று கண்களாலும் பார்வதியை ஆவலோடு நோக்கினுர்.

அதே கணம் தன் நிலையை உணர்ந்து, அம்பு எய்த காமன்மேல் கடுங் கோபம் கொண்டார். நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனைப் பார்க்க, அவன் கண்ணின் தீயிலே எரிந்து போனுன்.

''தவத்திற்கு இங்கே இடையூறு ஏற் படுகிறது'' என்று சிவன் வேறிடம் செல்ல, மனமொடிந்த பார்வதியும் வீடு திரும்பினுள். ஏமாற்றத்தினுல் தேவர் களும் மனமிடிந்து போய், செய்வதறி யாமல் திகைத்து நின்றனர்.

மன்மதன் எரிந்ததில் பார்வதிக்குத் துயரம் ஏற்பட்டது. ஆயினும் சிவனை மணக்கவேண்டும் என்ற உறுதி அத ஞல் அவளுக்கு அதிகமாயிற்று. ''என் அழகினுல் கைலாயபதியைக் கணவ

னுக அடைய முடியாது. ஆகவே தவத் திருல் அவரை அடைவேன்'' என்று தீர்மானித்துக்கொண்டு இமாலயத்தின் மீதிருந்து கடுந்தவம் செய்யலானுள்.

உடலே வருத்திப் பார்வதி இயற்றிய தவத்தைக் கண்டு முனிவர்களும் வியப் படைந்தார்கள். கோடை காலத்தில் நெருப்பின் இடையில் இருந்து கொண்டு பார்வதி சூரியனே இடை விடாமல் பார்த்துக் கொண்டே தவம் செய்தாள். மழை யென்றும் பாராமல், குளிரென்றும் அஞ்சாமல், நீரில் நின்று தவம் இயற்றினுள். முனிவர்கள் பழங் களேயும், உதிர்ந்த இலேச் சருகுகளேயும் தின்று பசியாறுவது வழக்கம். பார் வதியோ உலர்ந்த சருகுகளேயும் விலக் கித் தவம் செய்ததால் அவளுக்கு 'அபர்ணே' என்ற பெயர் ஏற்பட்டது.

இப்படி யிருக்கையில் ஒருநாள் தவ வேடம் பூண்ட ஓர் இளேஞன் பார்வதி


யிடம் வந்தான். பார்வதி அவனை அன்புடன் வரவேற்ருள். இளைஞன் பார்வதியின் தவத்தைப் பலவாருகப் புகழ்ந்தான். பிறகு அவளை நோக்கி, ''பெண்ணே! அழகு, இளமை, செல்வம் முதலிய எல்லாம் உன்னிடம் இருக்கின்றன. எதை விரும்பி நீ தவம் செய்கிருய் என அறிய விரும்புகிறேன்'' என்று சொன்ஞன். பார்வதி விடைதரவில்லை. ஆயினும் அவள் முகக் குறிப்பிலிருந்தும், பெருமூச்சிலிருந்தும் 'கணவனையே வேண்டுகிருள்' என்று அறிந்து கொண்டான் இளைஞன்.

பார்வதிக்கு உதவியாக அவளுடன் இருந்த தோழி பார்வதியின் நோக்கத்தைத் தெளிவாக இளைஞனிடம் கூறிஞள். 'சிவனை மணக்கவேண்டும் என்ற ஆவலுடன் பார்வதி தவம் செய்கிருள்' என்பதை அறிந்த இளைஞன் படபடப்பாகப் பேச ஆரம்பித்தான்.

இளேஞன் :-பார்வதி, சிவன் அருவருக்கத் தக்க நடவடிக்கைகளே உடையவன். கையிலே பாம்புகளே அணிந்திருப்பவன். இடுப்பில் துணியாகச் சுற்றியிருப்பது யானேயின் தோலாகும். இவனுக்கு வாகனம் ஒரு கிழட்டு எருது என்பதை நீ அறியாயா ?

பார்வதி :—என் மனத்துக்கு இனிய சிவனே நான் நன்கு அறிவேன். பாம்பை அணிந்தாலும், தோலே உடுத்தாலும் அவர் பெருமை குன்ருது. எருதில் ஏறிவரும் முக்கண்ணனேக் கண்டால் ஐராவதத்தில் அமரும் இந்திரனும் நடுநடுங்கிக் கீழிறங்கி வணங்குவான் என்பதை நீ அறியாய் போலும் !

இளேஞன் :—பார்வதி, உன் எண்ணம் எனக்கு விளங்கவே யில்லே. பெண்கள் கணவனிடத்தில் விரும்பும் குணங்கள் அழகு, செல்வம், உயர் பிறப்பு என்


S. Rajan

பவையாம். நீ இவற்றில் எதையும் அவனிடம் காண முடியாது. அவன் நெற்றிக் கண்ணன், பிறப்பில்லாதவன், சுடலையில் ஆடும் கூத்தாடி. இந்தத் திருமணம் சற்றும் பொருந்தாது, பார்வதி! அதனால் இந்த எண்ணத்தை நீ விட்டுவிட வேண்டும்.

பார்வதி :—மூடர்களுக்குப் பெரியோரின் தன்மை எளிதில் புலப்படாது. அதனால் அவர்கள் பெரியோரை அவமதிப்பது இயல்பு. நீ பேசியது ஒன்றும் மெய்யல்ல. மெய்யே ஆயினும் எனக்கு ஈசன் மேல் மாறாத காதல் தோன்றி விட்டது. ஆகவே உன் கடுஞ் சொற்களை நான் கேட்க விரும்பவில்லை.

இப்படிக் கூறிப் பார்வதி அங்கிருந்து போக முயன்றாள். போக முடியாமல் தன்னை யாரோ தடுப்பதை உணர்ந்த பார்வதி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

எதிரே இளைஞனைக் காணவில்லை. கைலாயநாதரே புன்சிரிப்புடன் நின்றார்.

பார்வதியின் உறுதியைச் சோதிக்கவே இறைவன் இப்படி இளைஞனாக வந்தார். தம்மிடம் பார்வதி நீங்காத காதல் கொண்டிருப்பதை உணர்ந்து மகிழ்ந்தார். பார்வதியைத் தம் மனைவியாக்கிக் கொள்ள ஈசன் இசைந்தார். உரிய காலத்தில் தக்க முறையில் சிவனுக்கும் பார்வதிக்கும் திருமணம் நிகழ்ந்தது.

உலகத்தின் தாய் தந்தையரான இவ்விருவருக்கும் குழந்தையாகப் பிறந்த குமரன் தேவர்களுக்குத் தளபதியானான்; தாரகனைப் போரில் வென்று உலகின் துயர் களைந்தான்.

குமார சம்பவம் என்ற இந்தக் காவியத்தில் இமாலயத்தை வர்ணிக்கும் பகுதி மிக அழகானது. மலையின் சரி

விலே சரள மரங்கள் செழித்து வளர்ந் திருக்கும். கழுத்தின் அரிப்பை நீக்க யானைகள் மரங்களின் மேல் உரசித் தேய்க்கும். அதனால் பட்டை பிளந்து பால் பீறிட்டு அடிக்கும். இதன் மணம் காடெங்கும் பரவும் என்கிறார் கவி.

இந்தக் காடுகளுக்கிடையே சவரி மான்கள் இங்குமங்கும் திரிந்துகொண் டிருக்கும். அவை தமது மயிர் நிறைந்த வாலை ஆட்டும்போது சவரியால் மலை யரசனுக்குப் பணிவிடை செய்வது போல் இருக்குமாம்.

இந்த மலைக்குக் குழந்தையாகப் பிறந்த பார்வதி அழகிற் சிறந்தவள். லட்சுமி தேவி அவள் முகத்தைக் கண்டு மகிழ்ச்சியோடு அதில் குடி புகுந்ததாகக் கவி வர்ணிக்கிறார். தாமரையின் மேலும் சந்திரன் மேலும் லட்சுமிக்கு அதிக விருப்பம். தாமரை

சூரியன் உதிக்கும்போது மலரும். சந்திரன் தோன்றும்போது இதழ் கூம்பி நிற்கும். சந்திரனின் அழகும் தாமரையின் அழகும் பார்வதியின் முகத்தில் ஒருங்கே அமைந்திருப்பது போல் இருந்ததால் லட்சுமி அங்கு குடியேறி விட்டாள்.

3

சாகுந்தலம் என்ற அழகிய நாடகத்தையும் காளிதாசன் இயற்றியுள்ளான். சகுந்தலை என்ற தபோவனத்துப் பெண்ணுக்கும், துஷ்யந்தன் என்ற அரசனுக்கும் காதல் ஏற்படுகிறது. துஷ்யந்தன் ரகசியமாக அவளைக் காந்தர்வ மணம் செய்துகொள்கிறான். தன் தலைநகருக்குத் திரும்பிப் போய் அவளை அழைத்துக் கொள்வதாக வாக்களித்த துஷ்யந்தன் ஒரு சாபம் காரணமாக அவளை மறந்துவிடுகிறான். பெண் வீட்டார் சகுந்தலையைத் துஷ்யந்தன் முன்


அழைத்துப் போகிறார்கள். சகுந்தலை தன் மனைவியல்ல என்று அரசன் மறுக்கவே, அவள் தாயாகிய மேனகை என்ற அப்சர ஸ்திரீ அவளைத் தன் இருப்பிடத்துக்குத் தூக்கிச் செல்கிறாள். ஒரு வேலை நிமித்தமாக மேலுலகத்துக்கு வந்த துஷ்யந்தன் சகுந்தலைக்குப் பிறந்த தன் குழந்தையைக் கண்டு பாசம் கொள்கிறான். அவன் மூலமாகச் சகுந்தலையை அடைந்து மகிழ்கிறான்.

இந்த நாடகத்தில் காளிதாசன் அரசனுக்கும் சகுந்தலைக்கும் காதல் ஏற்பட்டு வளர்வதை அழகாகக் காட்டுகிறார். அரசன் நகரம் சென்ற பின் சகுந்தலையைக் கணவன் வீட்டுக்கு வழி அனுப்பும்போது சகுந்தலையின் வளர்ப்புத் தந்தையான கண்வரின் நிலைமை நயமாக விளக்கப்பட்டிருக்கிறது. "சகுந்தலை இன்று கணவன் வீட்டுக்குப் போகிறாள். இந்த எண்ணத்தால் துக்

கம் ஏற்பட்டு என் தொண்டை அடைக்கிறது. கண்கள் திறந்திருந்தாலும் எந்தப் பொருளும் கண்ணில் படுவதில்லை. துக்கத்தால் அவை வெறும் வெளியையே நோக்குகின்றன'' என்று கண்வர் சொல்லுகின்றார்.

சகுந்தலை அன்புடன் வளர்த்த மான் அவளைவிட்டுப் பிரிய மனமில்லாமல் தொடர்ந்து வருகிறது. அவள் பிரியத்துடன் நீர் விட்டுக் காப்பாற்றிய கொடிகளையெல்லாம் நோக்கிக் கலங்கி நிற்கிறாள்.

சகுந்தலையை அன்பு மொழிகளால் தேற்றிக் கண்வர் அவளுக்குப் புத்திமதிகள் கூறுகிறார். ''புகுந்த வீட்டில் உள்ள பெரியோர்களுக்குப் பணிவிடை செய். எக்காரணம் கொண்டும் கணவன் மேல் கோபம் கொண்டு அவன் மனத்துக்கு எதிராக நடக்காதே. அரண்மனையில்



உள்ள வேலையாட்களிடம் எப்போதும் அன்பாக இரு. உனக்கு எத்தனை உயர்வு ஏற்பட்டாலும் கர்வத்துக்கு இடம் கொடுக்காதே. இத்தகைய பெண்களுக்கே புகுந்த வீட்டில் பெருமை உண்டு'' என்பதே அவர் அறிவுரை.

துஷ்யந்தன் சகுந்தலையை ஏற்றுக் கொள்ள மறுத்தபின் அவள் மேனகையோடு ஹேமகூடம் என்ற மலையில் மரீச முனிவரின் ஆசிரமத்தில் வசிக்கிறாள். அங்கே அவளுக்குப் பரதன் என்ற பையன் பிறக்கிறான்.

பலத்திலும், தைரியத்திலும் குழந்தைப் பருவத்திலேயே அவன் இணையில்லாதவனாகத் திகழ்கிறான். இரண்டு, மூன்று சிங்கக் குட்டிகளுடன் அவன் விளையாடிக் கொண்டிருக்கும் போது துஷ்யந்தன் அவனைப் பார்த்துவிடுகிறான். குழந்தையின் மேல் அவனுக்

குப் பேரன்பு உண்டாகிறது. ''முத்துப் போன்ற பற்களைத் திறந்து காட்டிக் குழந்தைகள் சிரிப்பார்கள். அந்தச் சிரிப்புக்கு ஒரு காரணமே இருக்காது. பொருளற்ற சொற்களைப் பேசிக்கொண்டு மண்ணிலே புழுதி படிய அவர்கள் விளையாடுவார்கள். பிறகு புழுதியோடு ஓடி வந்து தந்தையின் மடியில் அமர்ந்து கொள்வார்கள். இவர்களைப் பெற்ற தந்தை பெரும் பாக்கியம் செய்தவனே'' என்று மனம்விட்டுக் கூறுகிறான்.

குழந்தை பரதன் மேல் ஏற்பட்ட பாசத்தினால் மன்னன் சகுந்தலையைச் சந்திக்கிறான். சாபத்திற்கு விடுதலை ஏற்படுகிறது. முனிவரின் ஆசியோடு மனைவியையும் திரும்பப் பெற்ற அரசன் எல்லையில்லாத இன்பம் அடைகின்றான். நாடகத்தின் முடிவிலே அவன் இறைவனை வேண்டுவது இதுவே:

"உலகில் மன்னர்கள் குடிகளுக்காகவே அரசு செலுத்தவேண்டும். கல்வியில் பெரியவர்களுக்கு ஏற்ற உயர்வும் பெருமையும் என்றும் கிடைத்து வரவேண்டும். மறுபிறப்பு இல்லாமல் நானும் வாழ்க்கையின் இறுதியில் இறைவன் திருவடியே சேர வேண்டும்."